மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 198 -82 ஆம் ஆண்டு 4,400 மாணவர்கள் பயன் அடைந்துள்ளனர். அவர்களுக்கு உணவுக்காக, மாதம் ரூ 36 ஒதுக்கப்பட்டுள்ளது.

தீவிரகால்நடை அபிவிருத்தி செயற்கைமுறை கருவூட்டும் பணியை விரிவாக்கும் திட்டம்.

*வினா எண் 753—திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகம் முழுமையும் தீவிர கால்நடை அபிவிருத்தி செயற்கை முறை கருவூட்டும் பணி விரிவாகச் செய்யப்பட திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தற்சமயம் ஏதும் இல்லை.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தீவிர கால்நடை அபிவிருத்தி செயற்கை முறை கருவூட்டும் பணியை அரசு எந்தத் திட்டத்தின் அடிப்படையில் செயல் படுத்துகிறது? தமிழகம் முழுவதும் கால்நடை அபிவிருத்தி செயற்கை முறை கருவூட்டும் பணி அமுல்படுத்தப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டம் விஞ்ஞான ரீதியான இனவிருத்தி வசதிகள், நோய் தடுப்பு மற்றும் சிகிச்சை பணிகள் ஆகியவற்றை அளித்து பால் உற்பத்தி பெருக்குவது, தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டத்தின் நோக்கமாகும். ஒவ்வொரு திட்டமும் 50,000 பசுக்கள் மற்றும் எருமைகள் கொண்ட 50 கால்நடைக் கிளை நிலையங்களில் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டம் தமிழகத்தில் 9 இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திருச்சி, மதுரை, தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருநெல்வேலி. வாடிப்பட்டி, உசிலம்பட்டி, தாம்பரம் மற்றும் பண்ருட்டி ஆகிய இடங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் எத்தனை இடங்களில் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது? மேலும் தஞ்சை மாவட்டத்தில் இந்தத் திட்டத்தை விரிவாக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

1982 ஏப்ரல் 3]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடியைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் தீவிர கால்நடை அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்து ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக அந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) தகவல் கோரல்

(அ) காவேரி நதி நீர் பிரச்சினை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் காலையிலே 11-00 மணிக்கு டெல்லியிலே மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு. கேதர் பாண்டே தலைமையிலே நீண்ட நெடுநாட்களாகத் தீர்மானிக்கப்படாமல் இருக்கிற காவேரி நதி நீர் பிரச்னை சம்பந்தமாக............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது காலை 10.19 மணிதான் ஆகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: தென் மாநில முதலமைச்சர்கள் கலந்து கொள்கின்ற மாநாடு டெல்லியிலே கூடுவதாக செய்தி வந்திருக்கிறது. ஆனால், தமிழகத்தின் சார்பிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளவில்லையென்றும் அவருக்கு முக்கியமான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைப் பணிகள் இருக்கின்ற காரணத்தினாலே கலந்து கொள்ளவில்லையென்றும் இன்றைக்குக் காலையிலே பத்திரிகையிலே செய்திகள் வந்திருக்கின்றன.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகைச் செய்தியை வைத்துப் பேசிக் கொண்டிருக்க வேண்டாம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, உங்கள் மூலமாக நான் இந்த அரசாங்கத்திடம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு அந்த மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கலந்து கொள்ள இயலாவிட்டாலும் வேறு அமைச்சர், தலைமைச் செயலாளர் கலந்து கொண்டிருக்கலாம்.